THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

EIGHTH SESSION OF THE SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA

Monday, 7th December 1959.

The House met in the Assembly Chamber, Fort St. George, at eleven of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—SWEARING IN OF A MEMBER.

MR. SPEAKER : *முதலாவதாக அருப்புக்கோட்டைத் தொகுதியிலிருந்து சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் பிரமாணம் எடுத்துக்கொள்வார்.*

Sri Sowdi S. Sundara Bharathi was sworn in.

II.—OBITUARY REFERENCE TO DR. JOHN MATHAI AND SRI G. JAGANNATHA RAJU.

MR. SPEAKER : *அடுத்தபடியாக பழைய சட்டசபை அங்கத்தினராக இருந்த இரண்டு பேர்கள் இறந்துவிட்டார்கள் என்கிற செய்தியை வருத்தத்துடன் சபைக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. 1959-ம் வருஷம் நவம்பர் மாதம் 2-ந் தேதி டாக்டர் ஜான் மத்தாய் அவர்கள் காலமானார்கள். அவர்கள் இந்த ராஜ்யத்தில் பழைய சட்டசபை அங்கத்தினராக இருந்திருக்கிறார். மத்திய சர்க்காரில் ரயில்வே மந்திரியாகவும், நிதி மந்திரியாகவும் பணியாற்றியிருக்கிறார். பாம்பே யூனிவர்ஸிடியின் துணைவேந்தராகவும் நல்ல வேலை செய்து இருக்கிறார்கள்.*

1959-ம் வருஷம் நவம்பர் மாதம் 16-ந் தேதி பழைய சட்டசபை உறுப்பினராக இருந்த ஸ்ரீ ஜி. ஜகந்நாதராஜு அவர்கள் காலமானார். 1930-ல் இருந்து 1936 வரையில் அவர்கள் பழைய சட்டசபை கவுன்ஸில் உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறார். டெபுடி பிரிசிடெண்ட்டாக பணியாற்றியிருக்கிறார். நம்முடைய அனுதாபத்தை அவர்களது குடும்பத்தாருக்குத் தெரிவிக்கும் முறையில் ஒரு நிமிஷம் எல்லோரும் மௌனமாக எழுந்து நிற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(சபை அங்கத்தினர் ஒரு நிமிஷ நேரம் மௌனமாய் நின்றார்கள்.)

III.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : *அடுத்தபடியாக கேள்விகள் பதில்கள். கனம் நிதி அமைச்சர் அவர்கள் கல்கத்தா போயிருக்கிற காரணத்தினால் அவர்கள் பதிலளிக்கவேண்டிய கேள்விகளை எல்லாம் இன்னொரு*